# பெனெஸ்டா வணிக செயல்பாடு விரிவாக்கம்

நெல்லை, ஏப். 8-

இந்தியாவின் மிகப்பெரிய ஜன்னல் மற்றும் கதவுகள் பிராண்டும், இத்துறையில் சந்தையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றுமான பெனெஸ்டா, தென் தமிழ்நாட்டில் மற்றொரு புதிய ஷோரூமை திருநெல்வேலியில் திறந்து வைத்ததன் மூலம் தங்களின் சில்லறை வணிகத்தை விரிவுபடுத்தி உள்ளது. கிரீனஸ்ட் பில்டிங் சிஸ்டம்ஸ் என்ற இந்த பிரத்யேகமான ஷோரூம், எண்.16, திருமால் புரம், என்எச்-7, டக்கர் அம்மாள் புரம், திருநெல்வேலி என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. கண்ணாடி மற்றும் யுபிவிசியால் தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த ஜன்னல்கள் மற்றும் கதவுகள் இங்கு கிடைக்கும். இந்த புதிய ஷோரூமின் துவக்கத்தைப் பற்றி கூறும் பெனெஸ்டா நிறுவனத்தின் வர்த்தகத் தலைவரான சாகெத் ஜெயின், "எங்கள் பிராண்டின் நீண்டகால மரபை நினைத்து நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். கதவுகள் மற்றும் ஜன்னல்களில் ஏராளமான வடிவங்கள் மற்றும் பாணிகளைக் கொண்ட எங்களின் மாறுபட்ட தொகுப்பு, வாடிக்கையாளர்கள் தேர்வு செய்வதற்கு பல்வேறு வகைகளைக் கொடுக்கிறது. அனைத்து வகையான வாடிக்கையாளர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து, எங்களின் இருப்பை வலுவாக நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதே பெனெஸ்டாவின் தந்திரமாகும்" என்றார்.